முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி பி.கவிதா, பி.ஏ.,எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

அ.சா. 1 நாள்.05.09.2023

| SC. No. | 202/2018 | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(3ம் எதிரி ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கீழமருதாங்கநல்லூரில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர் ஆவார். சாட்சி 2 வைத்தியநாதசாமியை எனக்கு தெரியும். இறந்த எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் அழைப்பானை கொடுத்ததால் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 23.05.2005 அன்று 3.45 மணிக்கு மாப்படுகை ரயில்வே கேட்டு அருகே வாகன தணிக்கையில் போலீசார் ஈடுப்பட்டிருந்த நிலையில் புதிய அம்பாசிட்டர் காரில் 5 லாரி டியூப்புகளில் தலா 60 லீட்டர் வீதம் 300 லீட்டர் விஷச நேடியுள்ள நாட்டு சாராயத்தை 3ம் எதிரியால் 2ம் எதிரி உதவியுடன் 1ம் எதிரிக்கு சொந்தமான சாராயம் கடத்தி வரப்பட்டதாக தெரிவித்து எதிரிகள் சம்பவத்தில் ஈடுப்பட்டதாகவும், அதை நான் கேள்விப்பட்டதாகவும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.